கீழத்தட்டப்பாறை ஊராட்சி தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை : திருமதி.பொ.பத்மா

ந.க.எண் :கீத/ 01/2023 நாள் : 04.03.2024

பொருள் : மனைப்பிரிவு - தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம் - கீழத்தட்டப்பாறை ஊராட்சி, செந்திலாம்பண்ணை கிராமம் சர்வே எண் 51/1B,1C,1D,ல் 40450.00 ச.மீ (9.99 ஏக்கர்) பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு நிபந்தனைக்குட்பட்டு மனைப்பிரிவு அனுமதி வழங்கி உத்தரவிடல்.

பார்வை :
1. அரசாணை எண் 79 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் 04.05.2017.
2. தூத்துக்குடி நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் (பொ)/துணை இயக்குநர் (பொ) /உதவி இயக்குநர் (பொ) அவர்களின் கடிதம் ந.க.எண் UB0W2GK6/THOOTHUKUDI/DTCP/2023/2023/TCP நாள் 08.09.2023.
3. நன்கொடை ஆவண எண் 4288/2023 நாள்: 16.08.2023
4. கீழத்தட்டப்பாறை ஊராட்சி தீர்மான எண்: 193 நாள்: 25.01.2024.

*****

உத்தரவு :

தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம், கீழத்தட்டப்பாறை ஊராட்சி, செந்திலாம்பண்ணை கிராமம் சர்வே எண் 51/1B,1C,1D,ல் 40450.00 ச.மீ (9.99 ஏக்கர்) பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவு மனைகளுக்கு நிபந்தனைக்குட்பட்டு மனைப்பிரிவு அனுமதி வழங்கும்பொருட்டு, பார்வை (2)இல் காணும் கடிதத்தில் ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு SWP/DTCP/ THOOTHUKUDI/LAYOUT NO: 77/2023 மற்றும் திட்ட அனுமதிக்கு PLANNING PERMISSION NO : 31/2023 என எண்ணிடப்பட்டு, தூத்துக்குடி நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் (பொ)/துணை இயக்குநர் (பொ) /உதவி இயக்குநர் (பொ) அவர்களால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் பார்வை (3)இன் படி ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட வேண்டிய சாலை மற்றும் பூங்காவுக்குரிய அசல் ஆவணங்கள் ஊராட்சியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பார்வை (4)இல் கண்ட **ஊராட்சி தீர்மான எண்: 193 நாள் 25.01.2024.** இன் படியும் **ஊ.ம.அ.எண்: கீத/01/2023** இன்படி இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கி இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

இணைப்பு : அங்கீகரிக்கப்பட்ட வரைபடம்
மற்றும் நிபந்தனைகள்

பொ.பத்மா
ஊராட்சி தலைவர்
கீழத்தட்டப்பாறை ஊராட்சி

பெறுநர்
திருமதி.இர.திரிபுரசுந்தரி மற்றும் இர. சுரேந்தர்
நம்பர் 3, 9வது குறுக்குத்தெரு
சாஸ்திரி நகர்,
அடையாறு, சென்னை -600020

நகல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது

1. நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் (பொ)/துணை இயக்குநர் (பொ) /உதவி இயக்குநர் (பொ) தூத்துக்குடி உள்ளூர் திட்டக் குழுமம்,தூத்துக்குடி மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், தூத்துக்குடி.
2. சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், புதுக்கோட்டை
3. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ),தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம்
4. இருப்பு கோப்பிற்கு